DEPOSITION OF WITNESS
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI
**CC.No.43/2025**

Deposition of witness for Prosecution அ.சா.2

| | | |
|---|---|---|
| பெயர் | : | செண்பகவேல் |
| தகப்பனார்/கணவர் பெயர் | : | சீமைச்சாமி |
| கிராமம் | : | |
| தாலுகா | : | |
| தொழில் | : | |
| வயது | : | |

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 05.03.2026

எதிரி ஆஜர் இல்லை. அவரைப்பொறுத்து குவிமுச பிரிவு 317 ன்படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**முதல் விசாரணை:**

நான் தற்போது தேவகோட்டை தாலுகா காவல் நிலையத்தில் முதல் நிலைக்காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 20.10.2024 ம் தேதி தேவகோட்டை தாலுகா காவல் நிலையத்தில் பணியில் இருந்தபோது சார்பு ஆய்வாளர் கலைச்செல்வன், முதல் நிலைக்காவலர் செந்தாமரைக்கண்ணன் ஆகியோர்களுடன் ரோந்து பணியில் இருந்தபோது சார்பு ஆய்வாளர் கலைக்செல்வன் அவர்களுக்கு தச்சவயல் பாலம் அருகே சட்டத்திற்கு புறம்பாக மதுவிற்பனை செய்ததாக கிடைத்த தகவலின்பேரில் நாங்கள் மூவரும் தச்சவயல் பாலம் அருகே செல்லும்போது ஒருவர் நின்றுகொண்டிருந்தார் அவர் எங்களை கண்டதும் ஓட

முற்பட்டவரை பிடித்து சார்பு ஆய்வாளர் விசாரித்ததில் அவர் கையில் இருந்த சாக்குப்பைக்குள் express brandy 180 மில்லி அளவுள்ள 27 பாட்டில்கள் இருந்தன. அவைகளை சார்பு ஆய்வாளர் கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றினார். என்னிடம் காண்பிக்கப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 2ம் கையெழுத்து என்னுடையதுதான். (**மேற்படி கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 2ம் கையெழுத்து அ.சாஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) பின்பு எதிரியையும் சொத்துக்களையும் காவல் நிலையத்திற்கு கொண்டு வந்து வழக்கு பதிவு செய்ய உதவியாக இருந்தேன். சார்பு ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

எதிரி விற்பனை செய்ததை நாங்கள் நேரடியாக பார்த்தோமா என்றால் இல்லை. எதிரியிடம் இருந்து மது வாங்கியதாக எந்த நபர்களையாவது சாட்சியாக விசாரித்துள்ளேமா என்றால் இல்லை. எதிரி எந்த கையில் சாக்குப்பையை வைத்திருந்தார் என்று ஞாபகமில்லை. சாக்குப்பை என்ன நிறம் என்றால் ஞாபகமில்லை. காவல்துறையில் உள்ள நபர்களை தவிர வேறு நபர்களை சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். சொன்ன தேதியில் சொன்ன இடத்தில், சொன்ன நேரத்தில் மதுபாட்டில்கள் எதையும் எதிரி விற்பனை செய்யவில்லை என்றும் இந்த வழக்கு புள்ளிவிபரத்திற்காக பொய்யாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை: இல்லை**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

S/d..D.Poornima, B.A.,B.L(Hons).,L.L.M.,
குற்றவியல் நடுவர்,
தேவகோட்டை.